# ஆதி மார்க்க னீதி மொழி

**May 2026**

***இதழ் 58 – மே மாதம் 2026 வெளியீடு***

***© AMNA Trust, Chennai***



## மூலமந்நிரம்

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்னோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்நிர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

## பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்ந பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்ந தேசிகேந்நிரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

## மகாசங்ஙல்ப மந்நிரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் ஙோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்து ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்து தேவப்பிறப்பிலே பிறந்து ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai 

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே! எதார்த்த நன்மன சற்சன மக்களே ! பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் ஆசீர்பாதத்துடன் ஆதி மார்க்க னீதி மொழி மின்னணு சஞ்சிகை 58ஆவது இதழாக 13 அவை மற்றும் 3 இசை வகுப்பு நிகழ்வுடன் மெய்ம்மணம் கமழ உங்கள் கைகளில் மலர்ந்துள்ளது.

அறிவார்ந்த சேதிகள் யாவும் மக்களிடத்தில் சென்று சேர வேண்டும் என்ற ஒரே ஒரு காரண காரியத்திற்கான ஊடகமாக நின்று விளங்குவதே இம் மின்னணு சஞ்சிகை. இறைவனின் கஜானாவில் இருந்து வேத சாட்சியாக எடுத்து அருளப்பெற்றுள்ள இதனை நம்பி வருவோர் யாவரும் நற்கதி அடைவது திண்ணம். பாற்கடலைக் காய்ச்சி வடித்துத் தெளித்திட்ட வேதாந்தம் போல் ஆதி மார்க்க னீதி அவையின் அத்தனை நிகழ்வுகளும் இருப்பது சத்தியமே.

சர்வ நன்மைகள் பொருந்திய செய்திகள் பொதிந்த இந்த சஞ்சிகை நன்மக்களிடம் சென்று சேர வேண்டும் என்பதற்கே, இதனை ஓர் அரும் பெரும் திருப்பணியாக என் மாணாக்கப் பிள்ளைகள் நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக சிரம்மேற் தாங்கி நிறைவேற்றி வருகிறார்கள். தேடுபாடுடைய தேட்டார்களாகிய வருங்கால சந்ததிகளுக்கு தாங்கள் தேடும் பொருள் இன்னதுதான் என உணர்த்தும் உள்ளார்ந்த தத்துவாதீதம் கொண்டதே இந்த சஞ்சிகை. அவர்களின் தாகங்களைத் தணிக்கும் ஒரு தடாகமாக, கைகாட்டி மரமாக, சுமை தாங்கும் கல்லாக, கலங்கரை விளக்காக, இறைவன் இன்னார் என அறிவிக்கின்ற உட்பொருள் ஆதார உயிர்ப்பதிப்பை உள்ளடக்கிக் கொண்டு வருவதே இந்த சஞ்சிகை.

முற்காலத்தில் ஜீவனைக் குறித்து அருளப்பெற்ற விவிலியம் என்ற சத்தியவேதம் போல் இக்காலத்தில் ஜீவனைக் குறித்து அருளப்பெற்றுள்ள எழுதாத எழுத்து எனும் புத்தகத்தின் வெளிப்பாடே மனித தேகம். இதனையே அலிபு-லாம்-மீம் என இஸ்லாமும், பிதா-சுதன்-பரிசுத்தஆவி என சத்திய வேதமும் அருள்கிறது. சத்திய வேதத்தின் மகா வாக்கியங்களான *தட்டுங்கள் திறக்கப்படும்; கேளுங்கள் கொடுக்கப்படும்; தேடுங்கள் கிடைக்கும்* என்ற அறிவார்ந்த வார்த்தைகளை நிஜமாக்கிக் கொள்ளக்கூடிய ஓர் அவையாக நின்று விளங்குவதே ஆதி மார்க்க னீதி அவை. புராதன காலம் தொட்டு வந்த உண்மைகளை ஓங்கி உரத்த குரலில் சொல்லக்கூடிய ஒன்றாக இருப்பதுவே இம் மின்னணு சஞ்சிகை.



Copyright © AMNA Trust, Chennai 

இக்காலத்தின் தொழில்நுட்பங்கள் யாவும், இந்த செவிச்சுவை போதனையை நன்மக்களிடம் கொண்டு போய்ச் சேர்க்கின்ற ஒரே ஒரு மாபெரும் செயலுக்காக உண்டானது என்பதே நிஜம். ராமபிரானும், வள்ளல் பெருமானும், சாலை ஆண்டவர்களும், வந்த அதே வழியில் தான் இன்று சாலை ரவியாகிய நாமும் வந்துள்ளோம். பணத்திற்கோ, கூட்டம் சேர்க்கும் காரியத்திற்கோ அல்லாமல் மக்கள் தங்களை ஆள்கின்ற பொருள் இன்னது தான் என அறிந்து தெளிவான ஒரு சத்தியச் செயலில் வாழ வேண்டும் என்பதற்கே எமது இத்தனை பாடும்.

இந்த சஞ்சிகையில் சொல்லப் பெற்றுள்ள வருங்கால நிகழ்வுகளின் வைபோக சிறப்புகளின் நேரங்களும் இடங்களும் குறித்த செய்திகளைக் கண்டும் கேட்டும் தேடி வரும் சற்சன மக்களின் தாகம் தணிக்கின்ற ஒரு தடாகமாக நின்று விளங்குவதே ஆதி மார்க்க னீதி அவை. யாவரும் காணும் வண்ணம் சரவண நந்தவனம் என்ற வளாகத்தில் பரிசுத்த மெய் ஆலயம் நிர்மாணம் செய்யப் பெற்று அதில் பல தெய்வீக ஆடலங்களும், னீதித் திருமணங்களும் நடந்தேறி வருகின்றன.

ஒவ்வொரு மனுத் தலையின் உள்ளும் மாறாத சத்தியமாக, நிச்சயப் பொருளாக நின்றிலங்கும் சைவப் பொருளான பரம்பொருளுடன் இரண்டறக் கலந்து நன்மன மக்கள் யாவரும் அத்வைதமாக, சைவமாகவே ஆக வேண்டும் என்ற ஒரு நோக்கத்திற்கே இந்த முகப்பு உரையை செயலுடன் ஒவ்வொரு முறையும் எமது உதட்டளவில் அன்றி உள்ளத்திலிருந்து பேசுகிறோம். நன்மன சற்சன மக்களின் தலையில் இதனை ஏற்ற வேண்டிக் கங்கணம் பூண்டே இதனை ஓயாது ஒழியாது அயராது செயலாக்கி வருகிறோம்.

இதனைக் கண்டும் கேட்டும் தொடர்கின்ற எதார்த்த நன்மன மக்கள் யாவரும் பேரான பெரும் பேறு பெற வேண்டும் என எல்லாம் வல்ல பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி போற்றி வணங்கி வாழ்த்துகிறேன்.

நமஸ்காரம்.

*சாலை ரவி*

நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை



Copyright © AMNA Trust, Chennai 

*சுதந்நிரம்: எமன் அச்சம், எமனுடைய அதிகாரம் கடந்நு னிற்றல். எமனது அரசை மிதித்து வெற்றிகண்டு னிற்கும் அந்நத் திரம் கைவசமாகி னிற்றல்.*

*உன் சுவாசம் வெளியே ஓடாமல், மூக்களவே ஓடினால் அதுதான் தவம். தன் சுவாசம் அதிகம் ஓடாமல் னாளுக்குனாள் உள்ளடங்ஙி ஓடுவதைக் கற்கும் கல்வியே, சாகாக் கல்வி.*

*உனது மூச்சு உன் சொற்படி கேட்கிறதா அல்லது சொற்படி கேளாமல் அன்னியமாயிருக்கிறதா? அன்னியமாய், சத்துருவாய் இருக்கிறது. அதை உன் சொற்படி கேட்கச் செய்கின்றவர்களே ஆசான். னீ அவர்களிடத்தில் அன்னிய மின்றிப் பழகினால்தான் உனது சுவாசமும் அன்னியமாயில்லாமல் உன் சொற்படி கேட்கும்.*

***~ சாலை ஆண்டவர்கள்***



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2026 ஏப்ரல் மாதம் அவை நிகழ்வுகள் – 2026 மே மாதம் வெளியீடு

## 02-04-2026 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **வரந்நரு வாயில் னிற்பர்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம் :**
ஒன்றோடொன்று இணையாத இரு துருவமும், ஒன்றாக இணையும் மெய்ஞ்ஞான இரகசியமே பிரம்ம வித்தை. அந்தகரணத்தை கலங்கடிக்கும் கூற்றனை மிதித்து ஏறுவதே பாத வாழ்வாகும். அழியா வரம் அருளும் வரோதயரின் பேரிரக்கமே, விதி வசத்தால் புழுத்தலையாக இருந்த நம்மை மீட்டு, மதி வசமாக்கி வைரத் தலையாக வாழ வைக்கிறது.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண் : 14**

*ஜீவ சகோதரர் கௌதம் :*
மன்னிப்பு வாசல் அடைக்கும் காலம் அதி சமீபத்தில் வந்துவிட்டது. அத் தருணம் தொட்டு எங்கும் கத்தி முனையில் நீதித்தீர்ப்பு நடைபெறும். ஆசானின் நாத ஒலியே மரண பயத்தை மாற்றி வைக்கும் சவுக்காகும். மாயா சரீரத்துடன் திரு அவதாரம் தாங்கி வரும் மெய்க்குரு பிரானிடம் நாம் வைக்கும் சத்திய ஒட்டுதலே இறுதி நீதித் தீர்ப்பு எல்லையில் நம்மைப் பாதுகாக்கும்.

*ஜீவ சகோதரர் விஜயகுமார் :*
மனிதனின் அறிவுப் பிரகாசத்தை மறைக்கும் நீக்குதற்கரிய பசுந் திரையே ஆணவம். நம் தேகாதியந்தமான உடல், பொருளாகிய வாக்கு, ஆவியாகிய பிரணவம், நினைவாகிய பிரம்மம் யாவும் ஆசானின் பரிசுத்த எண்ணத்துக்கு லயப்பட்டு நின்றால் எமனிடத்தில் மீட்பு நிச்சயம். சுத்த சைதன்ய நாதரின் சொல்லுக் கிணங்கி, மெய்த் தொழுகையைத் திட கவனத்துடன் பழகித் தேர்ந்தால் வேதப் பதிக்குள் நுழைந்து வரமான சிரஞ்ஜீவி வாய்த்த மக்களாக நித்தம் வாழலாம்.

*ஜீவ சகோதரர் சங்கர் :*
அமானிதம் எனும் சீதனப் பொருளைப் பெற்று வந்தவனே மனு. குரு பிரான் அருளால் ஆறாவது அறிவின் லட்சணம் அறிந்தவரே மனதின் இருப்பிடமும், பிராணனின் இயக்கமும் இதனை இணைத்து செயலாற்றும் ஜீவனின் ரகசியமும் அறிவர். ஜீவனின் இருப்பிடமான சைவத் திருமாது இருக்கும் சிவ விலாசத்தை அறியச் செய்பவரே சிவகுரு வரதர். இறைவனின் ரகசியப் பெட்டகமான யதார்த்த உள்ளம் கொண்ட மனிதர் யாவர்க்கும் மெய்க்குரு ஒருவர் கட்டாயம் வாய்ப்பார் என்பது மகா சத்தியம்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai 

## 04-04-2026 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **அடங்குலொ டுங்குமி டம்பட னின்றவ...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.



**குரு பெருமான் அருளமுதம்:**

ஆசான் அருளும் அழியா அறிவுச் செல்வமே தர்மமாகவும் நம் தலையைக் காப்பதாகவும் உள்ளது. தர்மத்தின் தலைவனாக வரும் பெரியோர்களே இறை பொருளாகிய அறிவு மாணிக்கத்தை வாரி வழங்கும் வள்ளல். சர்வ உயிர்ப்பினையும் தர்மமாக அளந்து கொண்டிருக்கும் திருஸ்தலமே ஆதி மார்க்க னீதி அவையாக ஸ்தாபிக்கப் பெற்றுள்ளது.

*ஜீவ சகோதரர் கௌதம் :*

மூல மந்திரம் என்பது பிரகாச ரூபமாகக் காணக் கூடிய அவரவரின் சொந்த தேகமாகும். போலி குருக்களிடம் சிக்கி ஏமாறாமல் ஓர் மெய்க் குருவைச் சார்வதின் மூலமே பிறவிப் பிணி தீரும். அன்னவரின் பரிசுத்த நினைவுக்கு ஆளாகி மனம் அடங்கி இறை தரிசனம் காண்பதே சொர்க்கம். அடக்கம் எனும் செயலை மடக்கிப் பிடித்து அவ் எனும் அறிவு சொரூபம் ஆனவரே அனந்தர்.

**கோடாயிதக்கூர் வாக்கியம் எண் : 233**

எமன் எனும் கடுவாய்க்குள் நுழையாமல் தப்பித்துக் கொள்ளும் எண்ணம் உடையவனே அறிவுடையவன். மெய்க் குருவின் தயவே நம்மை எமனிடமிருந்து காக்கும் கவசமாகும். வித்தகப் பெருமானின் திருவாய் மொழியின் மூலம் வினை தீரும் வழி அறிந்தால் பிறவிச் சுழலில் சிக்காமல் பிறவாமை எனும் பெருநிலை பெற்று பரம சுகமடையலாம்.

*ஜீவ சகோதரர் கோபிநாத் :*

பொய்மையைப் பேசி பொழுதினைச் சுருங்கச் செய்யும் செயல் கொண்ட சாதனமே கைபேசி. செயற்கை நுண்ணறிவு அபாயத்தால் மனிதனின் அறிவு மழுங்கி அழி வழியில் செல்கிறது. இதனால் கவனக் குறைவும் வாழ்வின் முன்னேற்றமும் தடை படுகிறது. மெய்யைப் பெற்ற மக்களாகிய நாம் இதில் அதிக கவனத்துடன் இருந்து நன்மை தரும் செயல் ஒன்றுக்கே கைபேசியை உபயோகிக்க வேண்டும்.

*ஜீவ சகோதரர் விஜயகுமார் :* **பரிசுத்த வேதாகமம் - திமோத்தேயு அதிகாரம் 3:7**

பிறந்தது முதல் மரணத்தை னோக்கியே நமது பயணம் உள்ளது. கடம் திடத்துடன் உள்ள போதே இறைவனைத் தேடவேண்டும். முக்குணம் மற்றும் மும்மலத்தால் அழியும் நம் ஜீவனைக் காக்க இந்நிலவுலகிற்கு அவதரித்து வருவோரே ஜீவன் முக்தர்கள். **தீதும் நன்றும் பிறர் தர வாரா** எனும் திருவசனத்தின் மெய்மையை, குரு அருளால் உணர்ந்தால் துக்கமற்ற வாழ்வு பெற்று தூயவனாக வாழலாம்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே னிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai May 2026

## 05-04-2026 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீ. ஹேமலதா தியாகராஜன்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **அளவிலா வெகு காலமிப் பூமியில்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம் :**

பிறவா முதல்வனாகிய இறை குருவின் திரு ஆலவாய் சூலில் மறுபிறப்பு பெறுவதே பிறவாமைக்கான வழி. ஆறாவது அறிவைக் கொண்டே சர்வ மதங்களின் அடி நாதமாகிய மறலி கை தீண்டாமையின் மெய்ச் செயலை அறிய முடியும். அண்ணலின் அருளால் நமக்குள் ஆவிப் பொருளாய் நின்றிலங்கும் அரும்பளிங்கு ஈசனுடன் இரண்டறக் கலந்தால் பேரின்பத்தை இவ்வுடலுள்ள போதே அனுபவிக்கலாம்.

*ஜீவ சகோதரி பூர்ணிமா :*

இப்பூவுலகில் பிறந்த மானிடர் யாவர்க்கும் இறப்பு என்பதே விதியாக உள்ளது. ஆசானின் பெருங் கருணையே விதி வழியில் இலக்கின்றி பயணித்த நம்மைத் திசை திருப்பி மதி வாழ்வில் குடியேற்றுகிறது. நாதம் விளைந்த நாதனின் நாத வல்லபமே, நம் விதி எழுத்தை மதி எழுத்தாக மாற்றி சந்திரகலா நிதியாகிய அறிவுப் பிரகாசத்தை நித்தம் தரிசிக்க வைக்கிறது.

*ஜீவ சகோதரி உமாராணி :*

புண்ணிய உருவாம் ஆசானின் அன்பகத்தில் ஆகிக் கொண்ட நரனே மனு எனும் உயரிய பதத்திற்கு உரியவனாகிறான். மேலும் அவர்களின் அமுத ஊற்றில் நாள்தோறும் நனைந்து, பஞ்சாட்சரப் பொருளை அறிந்த பின்னரே தேவர் எனும் பெரும் பதம் கைவரவாகிறது. பிணி, மூப்பு , சாக்காடு அணுகாத வைரமணி தேகத்துள் நுழைந்து, சாகாக் கலை பழகித் தேர்வதன் மூலமே தெய்வத் திருப்பதியில் வாழும் வரம் அருளப் பெறுகிறது.

*ஜீவ சகோதரி அருணா :*

அண்டத்தில் சுழலும் காலச் சக்கரமே பிண்டத்தின் உயிர்ச் சக்கரம். மனுவின் நினைவெனும் ஆகாயத்தின் கீழ் இருந்து ஆட்சி புரியும் நவக்கிரகக் கோள்களே அவனை மன வலையில் சிக்க வைக்கிறது. நாத ஜோதிடராம் குருபிரான் தன் கோளரி வாள் கொண்டு காலக் கிரகங்களின் பிடியிலிருந்து நம்மை மீட்டு காலமற்ற இடத்தில் களிப்புடன் வாழ வைக்கிறார்கள்.

*ஜீவ சகோதரி முத்துலக்ஷ்மி :*

ஒர் எதார்த்த தேவ குருவின் பெருங் கருணையால், இல்மு எனும் மெய்க்கல்வி பழகி வர, அலை பாயும் நம் மனமானது லயமாகிறது. எண்ணம் பல கோடியாய் விரியாமல் ஓர்முகமாகும் செயலே நின்றதொரு பிரளயம். மெய் அனுபவம் மூலமே அவரவர் நாமத்துக்குரிய பொருள் இலங்கும் இடம், தன் பெருவெளி எனும் சாலையாக இருப்பதை அறிய முடியும். அடக்கம் என்பது வாழும் காலத்தில் அன்றி, செத்த பிறகல்ல என்ற நிஜத்தை மெய்யாக அறிவதற்கே இம் மனிதப் பிறப்பு எடுத்து வந்துள்ளோம்.

*ஜீவ சகோதரி அஞ்சனா:*

அருட்பெருஞ் ஜோதியாகிய ஆசானின் திருவாக்கே நம் மரண பயத்தை மாற்றி வைக்கும் வாணி னாடாகும். பஞ்சமா பாதகங்களில் கலந்து நாம் பயிரேறாமல் இருக்கிறோம் என்பதை உணர்த்தி, யோக உணவின் மூலம் நம் ஜீவனை செழிப்படையச் செய்கிறார்கள். கங்குல் பகலற்ற காருண்யத்தில் கலந்து நம்மையும் பூரணத்தில் புகுத்தாட்டி வைப்பவரே சிவகுரு வரதர்.



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவ சகோதரி விஜயசித்ரா :*

கலைவாணித் தாயாம் ஆசானின் நாத மருந்து நம் செவி வழி சென்று வித்தில்லா வித்தாக ஊன்றப் பெற்று அருள் கிரணமாக ஒளிர்கிறது. பொய்யகத்து உறைந்துள்ள மனதை மெள்ள மெள்ள மெய்யறிவு உதயம் காட்டி அருள் வித்தாக மாற்றுவதே மந்திரம். அத்தகைய மந்திரத்தை தன்னில் தானே பிரகாச ரூபமாகத் தரிசிக்கச் செய்பவர்களே குரு பெருமான். மரணமிலாப் பெருவாழ்வு அளிக்கும் மூல மந்திரத்தை, ஆசான் ஒரு மொழி கீதையாக அருளி, நம் வயது வாழ்நாளை மீட்டு மேலாம்பரமான நாலாம் பதம் அருள்கிறார்கள்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 09-04-2026 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **அறுபுரி னூல் பிரானிலை யறியான்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவ சகோதரர் சங்கர் :*

உயிரான பிராணனின் அகமிய மெய்ச் செயலை உணர்த்தவே, புறத்தில் உபநயனம் எனும் பூணூல் அணியும் சடங்கு பெரியோர்களால் உண்டாக்கப் பெற்றது. பிராணனை வீணாக்காமல் தேக்கும் செயலே பிராணாயாமம். அறுபுரினூலான பிராணனின் னிலை உணர்ந்தவனே பிராமணன் என சர்வ வேதங்களும் கூறுகிறது.

**திருமெய்ஞ்ஞானக் கொரல்: திருவாக்கியம் எண் : 14 (தொடர்ச்சி)**

எழுவகைத் தோற்றம் என்பது மனிதனுடைய ஏழ் பிறப்பின் இரகசியமாகும். திருப்பாதமான னற்றாளை தரிசனையாகப் பெற்றவர்களே ஏழ்நிலைக் கம்பத்தின் உட்பொருளை அறிந்து தேவப் பதத்தை அடைய முடியும். அறிவின் ரகசியமே எழுவகைத் தோற்றமாக அகத்திலும் புறத்திலும் உள்ளதை அறியும் சக்தி மனுவுக்கு மட்டுமே உண்டு. அறம் கொழுத்து மதியேறி விதி கடந்த ஆசானே, அமானிதத்தின் ரகசியத்தை உணர்த்த வல்லவர்.

**குருபிரான் அருளமுதம் :**

நாம் உட்கொள்ளும் அறுசுவை உணவை இரத்தமாக மாற்றும் உயிர் சக்தியை அறிவதற்கே ஆறாவது அறிவு தரப்பெற்றுள்ளது. மேய்ப்பர் இன்றி சைத்தானாகத் திரிந்து கொண்டிருக்கும் மனதை, மேய்ப்பராகிய குருபிரான் ஒரெழுத்து மாத்திரைக் கோல் கொண்டு சுல்தானாக மாற்றுகிறார்கள். காலக் கிரகங்களால் சூழப் பெற்று வினைக் கொடுமையில் கட்டுண்ட நம்மை கோளரி வாள் கொண்டு மீட்பவரே நாத ஜோதிடர். அறியாமை எனும் இருளை அறவே அகற்றி, அறிவு சார்ந்த பிரகாச வாழ்வை நாம் பெற வேண்டும் என்பதை அடினாதமாகக் கொண்டதே நம் ஆதி மார்க்க னீதி அவை.

பரிசுத்தஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை னிறைவானது .



Copyright © AMNA Trust, Chennai 

## 11-04-2026 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **வாக்குடைய மலங்ஙடத்தி வயங்ஙா னின்று...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
திருச்சிற்றம்பலப் பொருளாம் ஜீவனை அறிவித்து, ஐவழி விளைவின் அப்பாலாகிய மெய்வழியில் குடியேற்றி வைப்பவரே ஞானகுரு. ஆசானின் நாதமே சர்வ வேதமா மறையின் உட்பொருள் ஆதார உயிர்ப் பதிப்பை உணர்த்தும் வல்லபமுடையது. ஆறாவது அறிவுக்கான செயலைப் பழகி, அழிவற்ற நித்திய வாழ்வு பெற்று மனிதன் உய்ய வேண்டும் என்பதே பெரியோர்களின் நோக்கமாகும். வல்லப வஸ்துவாகிய இறைபொருளை அறிந்தடைந்து ஜென்ம சாபல்ய குலமாக வாழ்வதே இம்மனிதப் பிறப்பின் பெரும் பலனாகும்.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண் - 234:**
உபதேசத்தின் உன்னதம் உணராதவர்க்கு சாபமே வந்து சேரும் என்பதே வேதத் தீர்ப்பு. வினையே பிறப்பு இறப்பின் காரணமாகும். வினைத் தலைவனாம் மனதை அறத்தின் மூலம் லயப்படுத்தி அறிவாக மாற்றும் செயலே பிரம்ம வித்தை.

*ஜீவ சகோதரர் கௌதம் :*
உலக மாயையான பாலைவனத்தில் நம் மனம் அலைந்து துன்புறும் போது, குருபிரானின் அருள் பிரசாதமானது அசைவற்ற சுத்த அறிவாகிய சிவ நிலைக்கு நம்மை ஏற்றி வைக்கிறது. மனம் ஒடுங்கி, அறியாமை எனும் இருள் அறவே அழிந்தால், அறிவின் வெளிச்சம் உண்டாகி பேரின்பப் பெருவாழ்வு கை வசமாகிறது. மெய்யை மெய்யாகவே நிலையாக ஓரிடத்தில் நிரூபிக்கும் செயல் உள்ளவரே நித்தியர்.

*ஜீவ சகோதரர் விஜயகுமார் :* **வேதாகமம்: தெசலோனியன்: 1 : 8**
நால்வகை யோனியும், எழுவகைத் தோற்றமும், அகமியமாகத் தன்னிடத்தில் உணர்ந்து வாழ்வதே மெய்யான வாழ்க்கை. நிலையற்ற உலக வாழ்வில் காலனிடம் சிக்காதிருக்க, இறை நெறியில் விழிப்புணர்வுடன் நிலைக்க வேண்டும். அன்புருவாகிய ஆசானின் பேரிரக்கமே நம் புனற்றுறைக் கோயிலாகிய இதயாசனத்தில் வீற்றிருக்கும் இறை பொருளுடன் இரண்டறக் கலந்து வாழ வைக்கும்.

*ஜீவ சகோதரர் சங்கர் :*
ஆசானின் ஓரிதழ் தாமரை மூலம் நாம் காண்பதே இறை தரிசனம். அவரவர் நாமத்திற்குரிய பொருளே ஆன்ம ஒளியின் அடையாளமாகும். வேத முடியாகிய முப்பொருளின் இரகசியம் அறிவித்து அழியாப் பதியில் நம்மை குடியேற்ற திருஅவதாரம் தாங்கி வருவோரே பெரியோர். புண்ணிய உருவாகிய குரு பிரானின் தயவால் அறம் சார்ந்து வாழ்வதற்கான தர்ம சத்திரமாக விளங்குவதே ஆதி மார்க்க னீதி அவை.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai

## 12-04-2026 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஶ்ரீ. ஜெய்குமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய, **ஓதுமறை வேதநெறி உண்மையாய் ஒழுகிவளர் ...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

**குருபிரான் அருளமுதம் :**
ஆறறிவு பெற்ற மனிதனின் தலையாய கடமையான தன்னை அறிதலை உணர்த்தவே சர்வ ஜீவராசிகளையும் இறைவன் படைத்தார். ஓரறிவு தாவரம் கூட பருவத்திற்கேற்ப பூத்து, காய்த்து, தன் கடமையைச் செவ்வனே செய்கிறது. ஆனால், மனிதனோ சிற்றின்பத்தை மட்டுமே நாடுவதால், கற்பாந்த கோடி கால கருவூல வாழ்வு பெறாமல் பிறவிச் சுழலில் சிக்கித் தவிக்கிறான். தன்னை அறிந்த மகத்துக்களின் பெருந் தயவு கொண்டே மனு தன் கடமையை நிறைவேற்றி மகா உன்னதப் பிறப்பு எய்த முடியும்.

*ஜீவ சகோதரி அனுஷா :*
மனிதனின் சுத்தத் துறை இருதயத்தில் அறிவு சொரூபமாக வீற்றிருக்கும் இறைவனைத் தரிசிக்க வைப்பவரே மெய்க்குரு. அசலான இறை உண்மையை உணர்த்த உண்டாக்கப் பெற்றதே, ஆலயங்கள். ஆசான் அருளால் ஓதும் செயல் அறிந்தோரே அறிவுத் தெளிவு பெற்று அறம் சார்ந்து வாழ்கின்றனர்.

*ஜீவ சகோதரி இன்பலதா:*
அனித்திய ஆக்கைக் குடிலாகிய நம் தூல உடலில் நித்திய சொரூபமான இறைவன் வாசம் செய்கிறான். பரம குருவின் வழிகாட்டுதலின் படி, ஒழுக்க நெறி முறையுடன் வாழ்ந்தால், நிலையற்ற வீடாகிய இவ்வுடலில் இருக்கும் போதே நிலையான பரமபத வீட்டில் குடியேறி குன்றாத பெருவாழ்வு வாழலாம்.

*ஜீவ சகோதரர் பழனிக்குமார் :*
மனுவை உருவாக்கிக் காத்து, இரட்சிக்கும் பிரபஞ்ச ஆற்றலின் சக்தியை அறிவதே ஞான பாதையின் துவக்கமாகும். இல்மு எனும் மெய்க் கல்வி மூலமே பொய்யும் மெய்யும் பிரித்து அறிய முடியும். அறிவை மறைக்கும் கீழ் நோக்கமான எண்ணங்களே நபுசுகள் என்பதாகும். ஆசான் அருளால் சூக்கும தேகத்தில் குடியேறி வாழப் பழகித் தேர்வதே ஆனந்த நித்திய வாழ்விற்கான வழியாகும்.

*ஜீவ சகோதரர் அஜய்மகேஷ்:*
மெய்க் கல்வி என்பது படிப்பதன்றிப் பழகுவதாகும். அருளாளர்கள் நம் அகக்கண் திறந்து கற்பிப்பதே சாகாக்கலை. ஆசான் அருளிய மெய் வணக்கத்தை திட வைராக்கியமுடன் பழகி வர, எமன் பதி கடந்து மரணமிலாப் பெருவாழ்வு வாழலாம். கசடறுக்கும் கல்வியைப் போதித்து கங்குல் பகலற்ற இடத்தில் குடியேற்றி வைக்கும் மாபெரும் அவையே ஆதி மார்க்க னீதி அவையாகும்.

*ஜீவ சகோதரி தேவிப்ரியா:*
இகம், பரம் எனும் இரு கூறுகளைக் கொண்ட மானிடப் பிறப்பில், இகவாழ்வு, புலன் இன்பத்தை நாடுவதாகவும், பரவாழ்வு, புலனடக்கம் பெறுவதாகவும் உள்ளது. ஐம்புலன்களை வென்ற மா வீரர்களாக வாழ்வோரே மெய்ம் மகத்துக்கள். அவர்களின் பெருங் கருணையே நம்மை ஐயறிவு நுகர்விலிருந்து மீட்டு ஆரூரில் சேர்க்கும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai 

## 16-04-2026 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **சொல்லரிய னால் வேதம்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**
மறை னா வேந்தரின் திருவாய் மொழியே மரண அச்சத்தைப் போக்கி மெய்ப் பாதையில் நம்மை ஸ்திரமாக்கும். பிரம்ம வித்தையின் மூலம் புலனடக்கம், பொறியடக்கம் பெற்று, ஐந்து அவத்தைகளைக் கடந்து வாழ்வதே பேரின்பப் பெரு வாழ்வாகும். சிவன் எனும் வாடாத தீபம் நம்மிடம் வாடாமல் நம்மை மீட்பவரே மெய்ஞ்ஞானச் செம்மல்.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் வாக்கியம் எண் : 14 (தொடர்ச்சி)** நித்திய உலகின் நீதித் தீர்ப்பானது, நீடிய பரமபதப் பேரின்பப் பெரு வாழ்வாகவும் அல்லது நீங்காத கொடிய நெருப்பு நரகமாகவும் உள்ளது. பிரளயம் என்பது மனம் பிரண்டு அறிவெனும் லயத்தில் ஆக்கப் பெறும் தெய்வீகச் செயலாகும். ஆறாவது அறிவின் உன்னதத்தை உணர்ந்து, கற்பனை கடந்த சஞ்ஞீவியுடன் இரண்டறக் கலந்து வாழ்வதே நித்திய சுகம்.

*ஜீவ சகோதரர் கௌதம் :* ஜீவ பண்டிதரிடம் எதார்த்த உள்ளத்துடன் நாம் பணிந்து, இறுதி பரியந்தம் வரை நிலைத்து நின்றால் ஜீவன் கண்டு ஜென்ம சாபல்யம் பெறலாம். வேத மா மறைகளின் உட்பொருளை உணர்த்தி, மெய்ஞ்ஞான ராஜ பாட்டையில் நம்மை வழி நடத்தும் வித்தகப் பெருமானின் விரை கழல் சரணடைவோம்.

*ஜீவ சகோதரர் வடிவேலன் :* மந்திரசயனத் தேரோனின் அருளால், மூல மந்திரத்தை பிரகாச ரூபமாகக் கண்டு தரிசிப்பவர்களே தேவப்பதம் பெறுகின்றனர். அந்தகரணக் கூட்டத்தின் அகமிய மெய்ச் செயலை ஆசான் அருளால் உணர்ந்தால், நம் வினைத் தொடரானது அறுபட்டு, பிறவாமை பெறலாம். அருள் வரதரின் தயவால் சுயம்பிரகாச நித்தியானந்த பிரம்ம சொரூபத்தை நிஜ ரூப தரிசனையாகப் பெறுவதே பரமபத வாழ்வு.

*ஜீவ சகோதரர் சங்கர் :* குருபிரான் நம்மிடம் அருளும் உபகாரச் செயலே நம்மை குபேரனாக்கும். நித்தியராம் குருபிரான் தயவால் , சாகாக்கல்வி பழகி வர, அந்தகரணம் யாவும் அறிவு சொரூபமாக மாறும். மெய்ப் பாதையில் திட வைராக்கிய ஒழுக்கத்துடன் பயணித்தால் உயிருக்கான ஊதியத்தை நிச்சயம் பெறலாம்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 19-04-2026 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **அளவிலா வெகு காலமிப் பூமியிற்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

**குருபிரான் அருளமுதம் :**
ஆவிடை எனும் தேவ யோனியில் மறுபிறப்புப் பெற்ற மக்களே மீண்டும் கருவாசலில் நுழையாத கடவுள் செயல் அறிந்தோர். மெய்க் குருவின் திருவடி பணிந்து அவரவர் னாமத்திற்குரிய பொருளை அறிந்து அடைவதே வீடடைதல். பிரம்ம வித்தை செயலைக் கவனத்துடன் பழகித் தேர்வதன் மூலமே மெய்யுணர்வு மேலோங்கி மேலாம்பரமான வாழ்வு கை வரவாகும்.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவ சகோதரி ஜீவிதா :* கருப்பை கூடிக் கலந்த வினைத் தொடரால் தாயின் கருவறையின் துர்வாசனையில் உண்டானதே இத் தூலப் பிறப்பு. பேதமைப் பிறப்பான இதிலிருந்து மீட்டு, அன்பெனும் ஜீவக் கருவறையில் மகா வாசனை மகாப் பரிசுத்தமுடன் தேவப் பிறப்பில் நம்மைப் பெற்றெடுப்பவரே சிவகுரு. சிவன் பாதமும் குருபாதமும் ஒன்றே என உணர்ந்தவரே பிறவாமை எனும் பெருவாழ்வில் குடியேறி வாழ்வர்.

*ஜீவசகோதரி கவி சந்ரு:* மக்கள் உய்ய வேண்டியே மதம், வேதம், ஆச்சார அனுஷ்டானம் யாவற்றையும் பெரியோர்கள் அரும்பாடு பட்டு உண்டாக்கினர். இறைவனிடம் நாம் பெற்று வந்த அசலான வயது வாழ்னாள் மெய்ப் பால் அறிவதற்கே. சுத்த சைதன்ய நாதரின் சொல் ஒரு பொருள் கொண்டே நாம் நமது சொந்த தேகத்துள் நுழைந்து சொர்க்கப்பதி வாழ்வு வாழ முடியும்.

*ஜீவ சகோதரி அபிராமி :* குருபிரானின் னாத ஒலியே அறியாமை எனும் இருளைப் போக்கி சிவனெனும் எனும் வாடாத தீபத்தை நம் தலையில் ஏற்றுகிறது. அலைபாயும் நம் மனதை அறவழியில் செலுத்தி, சிந்தையற்ற தனித் தலைமைப் பதியில் நம்மைக் குடியேற்றும் திருநாளே சிவராத்திரி. சாகாக் கலை பழகித் தேர்ந்தே, தன் பெருவெளியாம் சாலையுள் குடி புகுந்து கற்பாந்த கோடி காலக் கருவூல வாழ்வைக் கைக் கொள்ள முடியும்.

*ஜீவ சகோதரி மோனிஷா :* ஆதி காலம் துவங்கி உலகில் குரு சிஷ்ய பரம்பரையாக வருவதே மெய்ஞ்ஞானம். எங்கும் நிறைந்த இறை பொருளின் இருப்பிடம் மனிதனின் சுத்தத் துறை இருதயமே. குருவின் னாதமே ஞானத்திற்கும், நம் ஜீவனுக்கும் காப்பாகும். ஒரு மொழியாம் குரு மொழியே அறிவு மாணிக்கமாக மிளிரும் இறை எனும் தேவ ரகசியத்தை, அறியாமையின் மொத்த உருவாம் இத் தேகத்துள் அறியச் செய்கிறது.

*ஜீவ சகோதரர் கார்த்திகேயன் :* ஐம்புல நுகர்வின் தலைவனான மனதைக் கையாள்வதில் மிகுந்த ஜாக்கிரதை வேண்டும். மனுவின் தலையாய கடமை தன்னை அறியும் அறிவை அறிவதே. குருவின் பரிசுத்த னினைவிற்கு இசைந்து வாழ்வதே சொர்க்கம். உயிரினும் மேலான ஒழுக்கமே, நம்மை வஞ்சுப் புலன் சதியாம் மறலியின் பிடியில் சிக்காது காக்கும்.

*ஜீவ சகோதரர் சீனிவாசன் :* குருபிரானின் மனோ னோக்கிற்கு இசைவதே இசை பட வாழ்தலாகும். பெரியோர்கள் அருளிய வேத வேதாந்தங்கள் யாவும் பிறவிப் பெருங்கடலைக் கடப்பதற்கான உபாயங்களே. குருமுகமாக வேதப் பொருளை அறிந்து மெய்க் கல்வியைப் பழக வைக்கும் இடமே ஆதி மார்க்க னீதி அவை.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 21-04-2026 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஶ்ரீமதி. புன்னகை மகேஷ்குமார்

**தேவ தேவேசனே திருமெய்ஞ் ஞானத் திருவரங்ங...** எனும் அமுதகலைக் ஞான போதம் இரண்டாம் காண்டம் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

*ஜீவ சகோதரர் கௌதம் :*
தேவ தேவேசனாகிய இறைவனே சாட்சி துணை நிகரற்றவர். வினை தீர்க்கும் வித்தகராம் குரு நாதர் தயவால் மூச்சுலயமாகிய மனோலயத்தை நித்தம் பழகினால் மெய் அனுபவம் பெற்று ஜீவ ஏற்றம் அடையலாம். வித்தை அவித்தையின் மூலம் மெய்ஞ்ஞானம் அருளி, மாண்ட மனுவை மண்ணிலிருந்து எழுப்பும் ஒலிவா மலையாகத் திகழ்வதே ஆதி மார்க்க னீதி அவையாகும்.



Copyright © AMNA Trust, Chennai May 2026

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் வாக்கியம் எண் - 235 :** ஆசான் திருவடி நிழலில் நெடுநாள் படிந்து நாதம் விளைந்த பிறகே சிவா அனுபவம் கிடைக்கும். ஞானத்தில் நுழைந்து இடைவிடாது பழகி வந்தால்தான் விஸ்வ நாதத்தைக் காணவும் கேட்கவும் முடியும். அப்படி நாதம் விளைந்தவர்களின் தயவே எமன் எல்லையில் நம்மை மீட்டு ரட்சிக்கும். இறை நிலையை அறிந்து பழகித் தேர்ந்தவர்களே பரம ஞானிகள். அவர்களின் ஒரு மொழிக் கீதையாகிய புதுமொழியே நம் ஜீவனுக்கான யோக உணவாகும். அவ்வுணவை செவி வாயிலாக உட்கொள்வதன் பலனாக, நம் அசலான இதயக் கமலத்தை தரிசித்து இறை பொருளுடன் இரண்டறக் கலந்து வாழலாம்.

*ஜீவ சகோதரர் கோபிநாத்:*

மனமானது மாயைக்கு நம்மை அடிமையாக்கும் ஆற்றல் கொண்டது. எனவே காலத்தை கவர்ந்து வீணாக்கும் செயலுள்ள கைபேசியை உபயோகிப்பதில் மிகுந்த கவனம் வேண்டும். அறிவைக் கூராக்கும் செயல் ஒன்றுக்கே கைபேசியை உபயோகிப்பது மிகவும் நன்மையாகும். சுய கட்டுப்பாடும், (DIGITAL FASTING) என்னும் வரம்பு மீறாத நெறி முறையையும் பின்பற்றி கைபேசியை நன்மை தரும் ஒன்றாக மாற்றிக் கொள்ளலாம்.

*ஜீவ சகோதரர் விஜயகுமார் :* **பரிசுத்த வேதாகமம் : ஹிப்ரு 1:5**

அளவிலா ஆசையின் வசம் சிக்காத உலக மக்களே மன நிம்மதியுடன் இருப்பர். காலனாக உள்ள மனதின் அசைவை நிலை நிறுத்தி சிவமாக்கும் செயலே பிரம்மவித்தை. சிற்றின்பம் எனும் அழி உலக வாழ்வை நாடிச் செல்லாமல், அழியா வர வாழ்வாகிய பேரின்பத்தை அனுபவிக்கவே நாம் ஆறாம் அறிவைப் பெற்று வந்துள்ளோம். பார்க்கும் இடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் ஏக பராபர பூரணமாகிய இறைபொருளே, நம் இருதயக் கமலத்துள் சுயம் பிரகாசமாக ஒளி வீசிக் கொண்டிருக்கிறது. குருபிரான் தயவால் அதனைக் கண்டு தரிசித்து பூரணத்துவம் பெறுவது ஒன்றே நமது லட்சியமாக இருக்க வேண்டும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 23-04-2026 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **இணங்கிய சுபாவம் பார்த்து...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது .

*ஜீவ சகோதரர் சங்கர் :*

ஞான சூரியனாக வரும் பெரியோரே தொண்டர்கள் இதயத்தில் ஞான சூரியன் உதயம் காணச் செய்து, பொய்ப் பொருளின் நாட்டம் விலக்கி, மெய்ப் பொருள் மீது பற்று உண்டாகச் செய்கிறார்கள். குருவின் சொல்லுக்கு இணங்கி நடக்கும் மனுவே, ஈமான் எனும் நம்பிக்கையை கைக் கொண்டு மரணமிலாப் பெருவாழ்வு பெறுகிறான்.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் : திருவாக்கியம் - 14 (தொடர்ச்சி):**

*ஜீவ சகோதரர் விஜயகுமார் :*

ஜீவனுக்கான அகமிய ரகசியம் அருள்பவரே ஆண்மை பொருந்திய குருபிரான். ஆறறிவு பெற்ற மனுவுக்கே அறுசுவை அறியும் வல்லமையும், வாக்கறிவும் உண்டு. நீதி எனும் பிடரிக்கண் திறக்கப் பெற்ற மனுவுக்கே மகஜர் மைதானத்தில் நடைபெறும் இறுதி னீதித் தீர்ப்பில் வெற்றி கிட்டுகிறது. அறிவுத் திருமேனி தாங்கி வரும் தீர்க்க தரிசியர்களின் வாய்மையே நாம் பிறவிப் பெருங்கடல் நீந்தவும் பிறவாமை பெறவும் வழி காட்டுகிறது.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவ சகோதரர் கௌதம் :*
அஞ்ஞன சலாகையால் நம் அஞ்ஞானம் அகற்றி குருடாய் இருந்த நமது அகக்கண் திறப்பவரே ஆசான். பிறப்பு இறப்பற்ற புண்ணியனாகிய இறைவனை தன் எனும் ஜீவ குகைக்குள் தரிசிப்பவனே நித்திய ஆனந்தமான சுவர்க்க வாழ்வை அடைகிறான். ஆசானின் ஓரெழுத்து மாத்திரைக் கோலே நம் கர்மேந்திரியங்களை ஞானேந்திரியங்களாக மாற்றும் வல்லபம் கொண்டது. நம் இதய மாளிகையைத் திறந்து ஜீவேசப் பொருளைக் கண்டு தரிசிக்கச் செய்யும் குருகொண்டலின் தயவே நம்மைக் குடியோங்கி வாழச் செய்யும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது .

## 25-04-2026 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **அளவிலா வெகு காலமிப் பூமியில் ...** எனும் குரு ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
பாவ இருளை மாற்றி, கோடி சூர்யப் பிரகாசத்தை மனுத் தலையில் பதிப்பவர்களே பரம குரு. ஏற முடியாத மலையில் எளிதாக ஏறுவதற்கான வழி அமைத்துத் தருவது போல், மெய்ஞ்ஞானப் பாதையில் நம்மை வழி நடத்திச் செல்லும் பெரியோர்கள், மாலையில் மறைந்த சூரியன் காலையில் உதிப்பது போல், உருவும் பெயரும் செய்கையும் வேறு வேறு புனைந்து இவ்வுலகை இரட்சிக்க வருகிறார்கள்.

*ஜீவ சகோதரர் கௌதம் :* சகிப்புத் தன்மையின் உச்சத்தில் வாழ்ந்து, அன்பெனும் வலைக்குள் நம்மை அரவணைத்து அழியா வர வாழ்வு அளிப்பவரே அருட்குரு. ஐம்புலன்களுக்கும் வல்லமை அளிக்கும் அறிவுக் கண்ணை, ஆசான் தன் மூலமந்திரச் சாவி கொண்டு திறந்த பின், தெவிட்டாத ஞானத் தெளிவு நமக்குள் பிறக்கும்.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண் – 236 :**
ஆதிமூல ஆவியே உருவெடுத்து வந்தாலும், அதனிடம் நாம் பற்று வைத்து தொடர் பிடியாய் ஏறும் அளவுதான் பலன் கிட்டும். ஆசானின் பரிசுத்த நினைவிலிருந்து பிறங்கும் நாதமே ஆதி மூல ஆவியாகும். தன்னையறிந்த பெரியோர்களின் தயவால், தன் எனும் ஜீவ குகைக்குள் நாள்தோறும் நுழைந்து பழகுவதே அசலான மெய் வணக்கமாகும்.

*ஜீவ சகோதரர் கோபி:* நம் வாழ்வில் இன்றியமையாத அம்சமாக மாறிய கைபேசியை, மிகுந்த கவனத்துடன் பயன் படுத்த வேண்டும். மெய்ஞ்ஞான அவை நிகழ்வு நடைபெறும் இடங்களில், கைபேசியை செயல்படாமல் வைப்பதே நாகரீகம். உணவு அருந்தும் போது கைபேசியை தவிர்ப்பது நலம். குழந்தைகள் கையில் கைபேசியை கொடுப்பதற்குப் பதிலாக புத்தகம் படிப்பது, செய்தித்தாள் வாசிப்பது, ஓவியம் வரைவது போன்ற பயனுள்ள பல கலைகளைக் கற்பிக்கலாம்.

*ஜீவ சகோதரர் சங்கர்:* தன்னை அறியும் அறிவே ஆறாவது அறிவாகும். எதார்த்த உள்ளம் கொண்ட மக்களுக்கே சமரசமும், சமாதானமும் நிறைந்த மெய் வாழ்வானது வரமாகிறது. பெரியோரைப் பரீட்சித்துப் பார்ப்பது, நரி தன் வாலால் கடலின் ஆழம் பார்ப்பது போன்றதாகும். குருபிரானிடத்தில் வஞ்சகமற்ற முழு சரணாகதி அடையும் மக்களுக்கே ஜீவ ஏற்றம் உண்டாகும். தவ சிரேஷ்டராகிய குரு பெருமானின் திருநோக்கிற்கு இணங்கி வாழ்வதே நம் தலையாய கடமையாகும்.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவ சகோதரர் குமார் :* **பரிசுத்த வேதாகமம் - யாக்கோபு 2:2, 3:2**

ஆவி இல்லாத சரீரத்திற்கு ஒப்பானதே செயலற்ற வாசகம். கப்பலை வழி நடத்தும் சுக்கான் போல், செயல்படுவதே பெரியோர்களின் நாவு. பொய்யனின் நாக்கு பாம்பின் விஷம் போன்றும், மெய்யனின் நாவு அமிர்த கலசமாகவும் உள்ளது. **குற்றம் புரிதல் எனதியல்பு அதைக் குணமாகக் கொள்ளுதல் உனதியல்பு** என வள்ளலார் குருபிரானிடம் முறையிடுவது போல் நம் குற்றமான வயது வாழ்நாளை மீட்டெடுக்கும் உளவைப் பெரியோர்கள் அருள்கிறார்கள். **அடியார்க்கு அடியேன் ஆகி நின்று அன்பால் அவனை அடைவதே சரியை மார்க்கம்** என திருமூலர் அருளியபடி, குருபிரானின் அன்பிற்கு சற்பாத்திரனாகி வாழ்வதே நம் கடமையாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 26-04-2026 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **சீர்மேவு மெய்ஞ்ஞான தெய்வச் சிரோன் மணியை...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.




*ஜீவ சகோதரர் சங்கர் :* மனுத் தலையில் விளங்கும் சிரோன் மணியே அமானிதம். ஞான பண்டிதராம் குருபிரானின் திருப்பார்வை தீட்சண்யம் கொண்டே, பஞ்சாட்சர மேனியாகிய குல தெய்வத்தை நெஞ்ஞாரக் கண்டு தொழ முடியும். அறுசுவை ஒளிக்கும் அகரப் பொருளான ஜீவன் அவாவுடன் தாவும் பொழுதே மனமாகி, பாச வலைக்குள் அகப்படுகிறது. குருவின் இரக்கத்தால், பிரம்ம வித்தை பழகிய பின்னரே, பாசம் அகன்று பதியாகிய இறைவனுடன் இரண்டறக் கலந்து வாழ முடியும். ஞான தேசிகரின் திரு ஆலவாய் ஊற்றிலிருந்து சுரக்கும் தெவிட்டாத தெள்ளமுதத்தை உண்டு பெருகிய குருகுலமே நம் ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவ சகோதரர் குமார்:* நவக்கிரகக் கோள் மாற்றும் நாத ஜோதிடரின் நாதமே நம்மைப் பிறவா நெறியில் புகுத்துகிறது. தத்துவங்களின் வடிவத்தை உணர்த்தும் மெய்ப் பொருளை உணர்வதற்கான சாதனமே ஆறாம் அறிவு. "மயிர்க்கால் தோறும் மாய்கின்ற வாயுவை உயிர்ப்பின்றி உள்ளே பதி" எனும் ஔவையார் வாக்கின் படி, நமது தொனியை மெய்ஞ் ஞானத்திற்காக அதிகமாக உபயோகிக்கும் பொழுதே நம் ஜீவப்பயிர் விளைவேறுகிறது. விஸ்வ நாதத்தைக் கண்டும் கேட்டும் பேசுகிறவர்களே வாக்மி என்ற பதத்திற்கு உரியவர்.

*ஜீவ சகோதரி அனுஷா:* ஆலயங்களே மனிதனின் தத்துவ வடிவத்தை அறிவிக்கும் அடையாளச் சின்னமாகும். ஆசானின் நாதத் தொனியால் நம் மனம் செம்மையாகும் போது, ஆகம விதிகள் யாவும் ஆறாவது அறிவின் செயலை உணர்த்த வந்த உளவுகள் என்பதை உணரலாம்.

*ஜீவ சகோதரி உமாராணி:* குரு பெருமான் தயவால் மூல மந்திரத்தை பிரகாச ரூபமாகக் கண்டு தரிசிப்பதன் மூலமே மெய்ப் பயன் அடைய முடியும். ஆசான் அருளால் சாவரும் முன் சாகப் பழகும் செயல் பழகி இக பர வாழ்வில் சகல நன்மைகளும் பெற்று வாழலாம்.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவ சகோதரி முத்துலஷ்மி சீனிவாசன்:* வாழும் காலத்தில் அனுபவிப்பதே சொர்க்கமும் நரகமும். எண்ணம் பல கோடியாய் விரிந்து மனம் அலைவது நரகமாகவும், ஓரறிவாகிய தெய்வ நிலையில் அசைவற்று நிற்கும் போது சொர்க்கமாகவும் உள்ளது.

*ஜீவ சகோதரர் அஜய் கிருஷ்ணன்:* மெய்க் கல்வியை செயலாக்கி வைக்கும் இடமே அசலான குருகுலம். சர்வ மூல மந்திரங்களும் வேத சாட்சியுடன் நிரூபணையாகும் திருத்தலம் ஒவ்வொரு மனுவின் தலையாகும். குருவின் அருளே எமபயம் கடந்த நித்திய வாழ்விற்கான மூலமாகும்.
*ஜீவ சகோதரர் தேவானந்த்:* சாவருமுன் சாகப் பழகும் பிரம்ம வித்தையே சன்மார்க்கச் செயலாகும். மனம் பூரிக்கும் பாவத்திலிருந்து விலகி, அறிவு பூரிக்கும் புண்ணியத்தை அருள்வது மெய்வணக்கமே. வரம்பிலா மெய்ஞ்ஞானத்தை வழங்க வரும் வித்தகப் பெருமானின் திருவடியில் சரணாகதி அடைவது ஒன்றே சாகாவரம் பெறும் வழி.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 30-04-2026 ~ வியாழக்கிழமை இரவு சிறப்பு அவை ~ சரவண நந்தவனம் தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **தரைதனில் நரராய்த் தோன்றி...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

*ஜீவ சகோதரர் சங்கர்:*
குருபிரான் அருளால் தன்னை அறிந்து பனிரெண்டு வருட காலம் அவர்களின் மனோ நோக்கிற்கு இணங்கி மெய்ச் செயல் பழகி வருவதே யோகமாகும். அசைவற்ற குணக் குன்றாகிய பிரம்மமே ஜீவனாக, உயிராக, அவரவர் நாமத்திற்குரிய பொருளாக உள்ளது. ஜீவபண்டிதம் நித்தம் போதிக்கப் பெறும் இடமாகிய ஆதி மார்க்க நீதி அவையின் மக்களே அறிவுக் கண் கொண்டு உயிரைக் காணும் செயல் அறிந்தவர்கள். ஆழ்ந்த தூக்கத்தில் அசைவற்ற நிலையில் மனம் இல்லை எனினும் அது அறியாமையின் அடையாளமே. தூங்காமல் தூங்கும் அறிவின் செயல் மூலமே மனம் சைதன்யப் பொருளாகி பிரம்ம சொரூபமாகும். அழிவுடல் சார்ந்த தோற்றம் உள்ள புற உலகப் பொய் வாழ்வு அனைத்தும் அழியும். தோற்றமில்லா அக உலக மெய் வாழ்வே அழிவற்றது.

சர்வ படைப்புக்கும் காரணமான நான் முகனாம் பிரம்மாவே எண்டிசைக்கும் னான் என முன் நிற்கும் பஞ்சாட்சரமாக மனிதனிடத்தில் பிரகாசிக்கிறது. பதி-பசு-பாசம் என்ற முப்பொருளில் நடுப் பொருளான பசுவே, ஆன்மாவாக சிற்றணு வடிவில் மனுவுக்குள் இலங்கி நிற்கிறது. **நடுவு நின்றார்க்கு நமன் இல்லை** என திருமூலர் பிரான் அருளிய படி, ஆசான் அருளால் மெய் வணக்க நிலைகளை இடைவிடாது அதிக கவனத்துடன் பழகி, எமனை மிதித்தேறும் வல்லபம் பெற்று வாழ்வதே மெய் வாழ்வாகும். தியானத்திற்கு மூலமாகிய குருவின் திரு உருவாம் நாதத் தொனியே, சீடனின் செவிக்குள் பாய்ந்து ஞானச்சுடர் ஏற்றுகிறது. "பேசும் குருபரன் பேச்சுக்குள்ளே பேசும்போது முகம் பாரு" என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ள படி, குருவின் நயன பாஷையின் நளினத்தை நாம் அதீத கவனத்துடன் உள்வாங்கி அகமுகமாகப் பயணித்தால், அஞ்ஞானம் விலகி உயர் ஞானம் பெற்று உயர்குடியில் வாழலாம்.

சத்திய சுத்த உத்தமர் மேரு ஸ்ரீ புத்த பகவான் அவர்களின் தீர்க்கதரிசனம் ஓதப் பெற்று, பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai 

**இசை வகுப்பு**
**தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்**

**12-04-2026 ~ ஞாயிற்றுக்கிழமை**

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **அரண்டிடு மடத்தாரு பதேசம்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. குருபிரான் வழிகாட்டுதலின் படி **சுருளி முப்பத்து முக்கோடி தேவர் மனு...** எனும் ஞான முறையீடு பாடல் ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

**19-04-2026 ~ ஞாயிற்றுக்கிழமை**

அருட்பிரகாச வள்ளலார் அருளிய **அருட்ஜோதி தெய்வம் எனை ஆண்டு கொண்ட தெய்வம்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. குருபிரான் வழி அருளிய பிரகாரம், சென்ற வாரத் தொடர்ச்சியாக **ஞான முறையீடு** பாடல்கள் பதம் பிரித்து பொருள் உணர்ந்து பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

**26-04-2026 ~ ஞாயிற்றுக்கிழமை**

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **னம்பிய தன்னுயிர் தற்கொலை செய்வான்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. குருபிரான் வழிகாட்டுதலின் படி, சென்ற வாரத் தொடர்ச்சியாக **ஞான முறையீடு** பாடல்கள் பதம் பிரித்து பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

# குரு வா ஆழ்க! குருவே துணை!




Copyright © AMNA Trust, Chennai

## 2026 - ஏப்ரல் மாதம் நடைபெற்ற அவை நிகழ்வுகள்

### 30-04-2026 ~ வியாழக்கிழமை

சற்குருபிரான் திருமுன்பாக திண்டிவனம் சரவண நந்தவனம் மெய் ஆலயத்தில் இரவு சிறப்பு அவை நடை பெற்றது.





## ஆதி மார்க்க னீதி அவையின் வருங்கால நிகழ்வுகள்

| நாள்/ இடம் | னிகழ்வுகள் |
|---|---|
| **27-06-2026 / திண்டிவனம் சனிக்கிழமை** | சற்குருபிரான் திருமுன்பாக திண்டிவனம் சரவண நந்தவனம் மெய் ஆலயத்தில் இரவு சிறப்பு அவை நடைபெற உள்ளது. |
| **28-06-2026 / திண்டிவனம் ஞாயிற்றுக்கிழமை** | சற்குருபிரான் திருமுன்பாக திண்டிவனம் சரவண நந்தவனம் மெய் ஆலயத்தில் பௌர்ணமி கொடியேற்றும் விழா நடைபெற உள்ளது. |



Copyright © AMNA Trust, Chennai

**குருபிரான் தங்களின் திரு நோக்கினின்றும் நோக்கிய பிரகாரம் ஆதி மார்க்க னீதி அவையின், 2026 ஏப்ரல் மாதம் குருபாதம் போற்றி நல்லுணர்வுடன் நல்லுள்ளம் கொண்டு நன்கொடை வழங்கிய நன்மக்களின் எண்ணிக்கை - 58**

**அனைவருக்கும் நன்றி !!!**

**AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்க ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

**Account Name: Aathi Margha Neethi Avai**
**Account Number: 50200047470073**
**IFSC: HDFC0000323**
**Branch: Mylapore**



Copyright © AMNA Trust, Chennai 

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***[www.amnatrust.org](http://www.amnatrust.org)***

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

***பின்குறிப்பு***: *இம்மின்னணுச்சஞ்ஞிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Sankar, Sivakasi*
*Shri. Vijayakumar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 58 – Month: May 2026*